# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,940—1918 ம் ௵ வைகாசிமீ 3 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 56 ம் பிரிவின்படி நீர்கொழும்பு லோக்கல் போட் சுகாதாரசங்கத்தாலியற்றப்பட்டு அதிகார மந்திரசபையாரின் ஆலோசனையோடு அரசாட்சி நடத்தும் உத்தியோகஸ்தராற் பெலப்பிக்கப்பட்டு மேல்வரும் உபவிதிகளானவை யாவரும் அறிந்துகொள்ளும்பொருட்டுப் பிரசுரஞ்செய்யப்படுகின்றன என்பது இதினால் விளம்பரஞ்செய்யப்படுகின்றது.

உத்தமனுரது கட்டளைப்படி,

கொழும்பு, கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1918 ம் ௵ சித்திரைமீ 18 ந் உ.

ஏ. எஸ். பெக்டன்,
கலோனியல் சக்கிறுத்தார்.

### பொது பிரமாணங்கள்.

(*a*) லோக்கல் போட் சங்கத்தின் பட்டண எல்லைக்குள் யாராகினும் அப்பப் போறணையை, சாப்பாட்டுக்கடையை, தேயிலை அல்லது கோப்பிக் கடையை, இறைச்சிக் கடையை, மாட்டுக்காலையை, பாற்சாலையை, புடவை கழுவுகிற இடத்தை, அல்லது பொது விடுதிவீட்டை லோக்கல் போட் சங்கத்தலைவனிலிருந்து வருஷாந்த லைசன்சு இல்லாமல் வைத்திருக்கப்படாது. மேற்சொல்லிய இடங்களை ஒழுங்குக்கு கொண்டுவருகிறதற்கு இருக்கும் பின்வரும் துணைப்பிரமாணங்களுக்கு அல்லது தற்போது இருக்கும் லோக்கல் போட் சங்கத்தின் பிரமாணங்களுக்கு அமையாமல்விட்டால் யார் ஒருவனுக்கும் லைசன்சு கொடாமல்விட லோக்கல் போட் சங்கத்தலைவருக்குத் தத்துவம் உண்டு. லைசன்சு கொடுத்த வருஷத்தின் மார்கழிமாதம் (டிசம்பர்) 31 ந் திகதி மட்டும் அல்லது லைசன்சுபத்திரத்தை அழிக்குமட்டும் ஒவ்வோரு லைசன்சபத்திரமும் பெறும். தேசாதிபதி சபையின் உத்தரவுடன் லோக்கல் போட் சங்கம் ஒவ்வொரு லைசன்சுக்கும் சலார் விதிக்கலாம்.

(*b*) மேற்சொல்லப்படும் பிரமாணங்களை அல்லது மேற்குறித்த இடங்களைப்பற்றி தற்போது இருக்கும் பிரமாணங்களை மீறினதினுல் இரண்டு விசை அல்லது அதிகம் தரம் லைசன்சுகாறனை குற்றமாகக்கண்டு எழுதப்பட்ட கோட்டாருக்கு லோக்கல் போட் சங்கத் தலைவனுல் இந்த அதிகாரத்தின்கீழ் அப்பேர்ப்பட்ட ஆளுக்கு கொடுக்கப்பட்ட லைசன்சை அழிக்க நியாயமுண்டு. அழிக்கப்பட்ட லைசன்சின்பேரால் லோக்கல் போட் சங்கத்தலைவனுக்கு தன் எண்ணத்தின்படி அப்பேர்ப்பட்ட ஆளுக்கு புதிய லைசன்சு கொடுக்காமல் விட தத்துவமுண்டு. பிரசித்த சங்கத்தினுல் வைக்கப்பட்ட அல்லது அதில் நிற்பாட்டப்பட்ட சந்தைகளிலிருக்கும் தொழுவங்களுக்கு இந்தப் பிரமாணங்கள் பொருந்தாது.

### சாப்பாட்டு கடைகளும் தேய்த்தண்ணீர் கோப்பி கடைகளும்.

1. சங்கத்தலைவன் திருப்திக்கு எல்லா சாப்பாட்டு கடைகளும் தேத்தண்ணீர் கோப்பிக் கடைகளும் துப்பரவாயும் சுகத்துக்கு ஏற்ற மாதிரியாயும் வைத்திருக்க வேண்டும்.

2. எந்தச் சாப்பாட்டு கடையிலும் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக் கடையிலும் பாவிக்கப்படும் அல்லது அதற்குச்சேர்ந்த எல்லா பாத்திரங்களும், மேசை கதிரைகளும் மற்றும் தேவையான சாமான்களும் எப்பொழுதும் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

3. எல்லா சாப்பாட்டுக் கடைகளிலும் தேத்தண்ணீர் கோப்பி கடைகளினதும் சிவர்கள் சுண்ணும்பு பூசப்பட்டு வெள்ளை யடித்திருக்க வேண்டும். அங்கேயுள்ள அறைகள் நல்லாய் காற்று வரக்கூடியதாயும் நல்ல வெளிச்சம் வரக்கூடியதாயு மிருக்கவேண்டும்.

4. எந்தச் சாப்பாட்டு கடையிலும் அல்லது தேய்த்தண்ணீர் கோப்பிக் கடையிலும் அல்லது அதற்கு சுத்தவரை இருக்கும் இடங்களிலிருக்கும் எல்லா கஞ்சலும் அழுக்கும் ஒரு நாளைக்கு இரண்டு தரம் கொண்டுபோக வேண்டும்.

5. தொத்து வியாதியுள்ளவனை அல்லது சாப்பாட்டுக் கடையின் அல்லது தேய்த்தண்ணீர் கோப்பிக்கடையின் முதலாளி யறியக்கூடியதாய் கொஞ்சக் காலத்துக்குமுன் அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனுயிருந்தவனை அல்லது அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனை கொஞ்சக் காலத்துக்குமுன் பராபரித்தவனை சாப்பாட்டுக் கடையின் அல்லது தேய்த்தண்ணீர் கோப்பிக்கடையின் முதலாளி அந்தக் கடையில் அல்லது அதற்குகிட்ட வேலைபார்க்கிறதற்கு எடுக்கப்படாது.

6. அப்பேர்ப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் சீனியை கண்ணுடி மூடிபோட்ட அகன்ற வாயுள்ள போத்தில்களில் வைத்திருக்கவேண்டும்.

7. விற்பனவுக்காக வைத்திருக்கும் எல்லா பணிகாரங்களையும், இனிப்புப் பண்டங்களையும் அவையைப்போன்ற மற்றும் பண்டங்களையும் ஈ இலையான் போகக்கூடாத நல்லாய் உண்டாக்கப்பட்ட கண்ணுடி பெட்டிகளில் வைத்திருக்வேண்டும். ஈ இலையான் விழக்கூடிய மாதிரியாய் ஒரு சாப்பாட்டுச் சாமான்களும் வைத்திருக்கப்படாது. பாவிக்கப்படும் கண்ணுடிப் பெட்டிகளை மெத்தத் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

8. பாவிப்புக்குக்கூடாத தேய்த்தண்ணி, கோப்பி, அல்லது பால் அல்லது சாப்பாட்டு மிச்சம் அல்லது பாவிப்புக்குக் கூடாத சமையல் சாமான் ஒன்றும் நிலத்தில் வீசப்படாது. அவைகளை சரியான பாத்திரத்தில் போட்டு வைத்து ஒவ்வொரு நாளும் கொண்டுபோக வேண்டும்.

9. சாப்பாட்டுக் கடையடியில் அல்லது தேய்த்தண்ணீர் கோப்பிக் கடையடியில் கலந்தபால் விற்கவும்படாது விற்பனவுக்கு கொடுக்கவும் படாது, விற்பனவுக்காக வைக்கவும்படாது, அல்லது வைத்திருக்கவும்படாது. பாலினுடைய தொகையை கூட்டுகிறதற்கு அல்லது வெளியாய் தோற்றப்படுகிற அதினுடைய நிறம் குணத்தை கூட்டுகிறதற்கு பாலுக்கு தண்ணீர் அல்லது வேறு தண்ணீர் பதார்த்தத்தை அல்லது வேறு சாமானைச் சேர்த்தால் இந்தப் பிரமாணத்தில் கலந்த பால் என்று சொல்லப்படும். ஆனால் வாடிக்கைகாரருக்கு உடனே சாப்பிடுகிறதற்கு தேய்த்தண்ணீர் கோப்பி அல்லது குடிக்கும் பதார்த்தம் சரிக்கட்டுகிறதற்கு பால் கலந்தால், கலந்த பால் என்று கருதமாட்டாது.

10. ஒவ்வொரு சாப்பாட்டு கடையிலும் தேய்த்தண்ணீர் கோப்பி கடையிலும் பிரதானமான இடத்தில் இந்தப் பிரமாணங்களை மட்டைபோட்டு தூக்கியிருக்கவேண்டும்.

### இறைச்சிக் கடைகள்.

1. ஒவ்வொரு இறைச்சிக் கடையும் நல்லாய் காற்று வரக்கூடியதாயும் நல்ல வெளிச்சம் உள்ளதாயு மிருக்கவேண்டும். அங்குள்ள சிவர்கள் சுண்ணாம்பு பூசப்பட்டு வருஷத்துக்கு நாலு தரத்துக்குக் குறையாமல் வெள்ளையடிபட வேண்டும். அதின் நிலம் சிமேந்து போடப்பட்டு தண்ணீர் நிற்காமல் ஓடத்தக்கதா யிருக்கவேண்டும்.

2. இறைச்சி வைத்திருக்கும் ஒவ்வொரு அறையும் மெத்தத் துப்பரவா யிருக்கவேண்டும்.

3. இறைச்சிக் கடையிலிருக்கும் ஒவ்வொரு மேசையும் "சிங்" லோகத்தால் அல்லது சங்கத்தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு ஊறாத சாமானால் மூடப்பட்டிருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட மேசைகளும் இறைச்சி வைத்து வெட்டும் மரக்குத்தியும் மற்றும் எல்லா ஆயுதங்களும் மெத்தத் துப்பரவாய் வைத்திருக்கவேண்டும். பாவித்து முடிந்த பின் அவைகளை தண்ணீரினால் கழுவி துப்பரவான பிறஸ் ஆல் உரஞ்சித் துடைக்க வேண்டும். இறைச்சி தூக்குகிறதற்கு பாவிக்கும் எல்லாக் கொளிக்கிகளும் மினுக்கப்பட்டதாயும் கறள் இல்லாததாயு மிருக்கவேண்டும்.

4. உபயோகமற்றவும் விக்கக்கூடாத சாமான்களையும் குடல்களையும் அவையைப்போன்ற மற்ற சாமான்களையும் உடனே எடுக்கப்படாவிட்டால் உள்ளெங்கும் "சிங்" லோகத்தால் மூடப்பட்ட பெட்டிக்குள் வைத்திருக்கவேண்டும். அந்தப் பெட்டி ஈகள் உள்ளுக்கு போகக்கூடாத பெருப்பமுள்ள துவாரங்கள் உள்ள "சிங்" லோக மூடியால் மூடப்பட்டிருக்கவேண்டும்.

5. இறைச்சிக் கடைக்குள்ளும் அதற்குக் கிட்டவுள்ள இடங்களிலிருக்கும் எல்லா உபயோகமற்ற சாமான்களையும் அழுக்குச் சாமான்களையும் ஒரு நாளைக்கு ஒரு தரமாகுதல் எடுக்கவேண்டும். கான்களையும் நல்லாய் உரஞ்சிக் கழுவ வேண்டும்.

6. தொத்து வியாதியுள்ளவனை அல்லது இறைச்சிக் கடைக்காரன் அறியக்கூடியதாய் கொஞ்சக் காலத்துக்கு முன் அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனாயிருந்தவனை அல்லது அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனை கொஞ்சக் காலத்துக்கு முன் பராபரித்தவனை, இறைச்சிக் கடையில் வேலைபார்க்கிறதற்கு இறைச்சிக்கடைக்காரன் எடுக்கப்படாது.

7. ஒவ்வொரு இறைச்சி யடிப்பவனும் கழிவு சாமான்கள் போடுகிறதற்கு எடுத்துக்கொண்டு போகக்கூடிய தகர வாழி அல்லது ஏதேனும் லோகத்தால் செய்த பாத்திரம் வைத்திருக்க வேண்டும்.

8. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் எப்பொழுதும் திறந்திருந்து வியாபாரத்தின் ஒழுங்கும் லோக்கல் போட் சங்கத்தின் தலைவரால் அல்லது அவரால் ஏற்படுத்தப்பட்ட வேறு ஆளால் சோதிக்கப்படுகிறதற்கு ஏதுவாயிருக்கும்.

9. இந்தப் பிரமாணங்களை மட்டை போடப்பட்டு ஒவ்வொரு இறைச்சிக் கடையிலும் பிரதானமான இடத்தில் தூக்கி யிருக்கவேண்டும்.

### காலைகள்.

1. ஒவ்வொரு லைசன்சு முடிபட்ட காலையும் சங்கத்தலைவரால் றிசிஸ்டர் பண்ணப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு காலையின் வாசலில் லைசன்சு எடுத்த ஆளால் றிசிஸ்டேட் நம்பர் என்ற சொற்களும் சொந்தக்காறனுடைய பேரும் பூச்சு மையால் எழுதப்பட்ட விளம்பர பலகை தூக்கியிருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு காலையும் அல்லது வண்டில்கள் மாடுகள் வந்து தரிக்குமிடமும் சங்கத்தலைவர் திருப்திப் படக்கூடிய மாதிரியாய் மட்டம்பண்ணி, கான் கட்டியிருக்கவேண்டும். கடுமையானவும் மட்டமாயுமுள்ள மேற்பரப்பு இருக்கக்கூடிய மாதிரியாய் நிலம் தளிவிசை பதித்திருக்க வேண்டும். அல்லது உடைத்த கல்லால் நல்லாய் பதித்திருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட காலையில் அல்லது தங்குமிடத்தில் மாடுகளை அல்லது மற்று மிருகங்களை விடுகிறதற்கு பாவிக்கப்படும் எல்லாக் கட்டிடங்களும் மூன்றாம் பிரமாணத்தில் காட்டியபடி கட்டப்பட்டு வைத்திருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட காலையை அல்லது தங்குமிடத்தை துப்பரவானவும் சுகத்துக்குடைய மாதிரியாயும் வைத்திருக்க வேண்டும். அதை ஒவ்வொரு நாளும் நல்லாய்க் கழுவி எல்லா சாணியையும் அழுக்கையும் குடியிருக்கும் வீடுகளுக்கு எட்ட உள்ள சங்கத்தலைவரின் அனுமதிபெற்ற இடத்தில் ஒவ்வொரு நாளும் கொண்டுபோய் கொட்ட வேண்டும். மேற்சொல்லியபடி ஒவ்வொரு நாளும் துப்பரவுபண்ணுகிறதற்கு இடைஞ்சலாய் இருக்கக்கூடிய மாதிரியாய் ஒரு சாமானும் அப்பேர்ப்பட்ட காலையில் வைக்கப்படாது.

3. குதிரை மாலாய் அல்லது ஆடுமாடு விடுமிடமாய் அல்லது ஆடுமாடு தரிக்குமிடமாய் பாவிக்கப்படும் ஒவ்வொரு கட்டிடத்தின் அல்லது கொட்டிலின் சொந்தக்காரன் அல்லது குத்தகைக்காரன் அல்லது அதிலிருப்பவன் அந்த இடத்துக்கு சங்கத்தலைவன் திருத்திப்படக்கூடிய மாதிரியாய் கழுவின தண்ணீர், மூத்திரம், மழைத் தண்ணீர் ஓடக்கூடியதாய் வசதியான சிமேந்துக்கான் கட்டுவிக்க வேண்டும். ஆனால் தேள்வையென்று எண்ணினால் சங்கத்தலைவன் சொல்லியபடி கட்டப்பட்ட ஒரு அல்லது ஒன்றுக்கு கூடிய மூடப்பட்ட பாத்திரங்களில் மூத்திரம் அல்லது கழுவின தண்ணீர் விளக்கூடிய மாதிரியாய் கட்டப்பட்ட கான்கள் வைக்கும்படி சங்கத்தலைவன் கட்டளைபண்ணலாம். சவுக்கியத்துக்கு இடையூறு இல்லாத மாதிரியாய் சொந்தக்காரனின் அல்லது குத்தகைக்காரனின் அல்லது அதில் இருப்பவனின் செலவில் அந்தப் பாத்திரங்களில் இருக்கும் சாமான்களை ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொண்டு போய்விட வேண்டும். அப்பேர்ப்பட்ட கட்டிடத்தின் அல்லது கொட்டிலின் நிலம் செங்கல்லுத் தளுவிசை பதித்திருக்க வேண்டும் அல்லது சிமேந்தால் அல்லது கல்லால் அல்லது சிமேந்துக்கல்லால் அல்லது தார் அடித்த கல்லால் அல்லது கெதியில் துப்பரவாக்கக்கூடிய வேறு கடும் சாமானால் பதித்திருக்க வேண்டும். அதை பள்ளந்திட்டி இல்லாததாயும் பழுதில்லாததாயும் வைத்திருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட கட்டிடம் அல்லது கொட்டில் வெள்ளையடிக்கக் கூடியமாதிரியாய் கட்டியிருந்தால், சங்கத்தலைவன் கட்டளையிட்டால், ஆறுமாதத்துக்கு ஒரு தரம் அல்லது கூடினதரம் வெள்ளையடிக்க வேண்டும். (அப்பேர்ப்பட்ட கட்டிடம் அல்லது கொட்டில் குடியிருக்கும் வீடுகளிலிருந்து மெத்தத் தூரத்தில் இருக்கிற ஞாயத்தால் அல்லது வேறு ஞாயத்தால் சங்கத்தலைவன் தேள்வையற்றதென்று நினைத்தால், மேற்சொல்லிய கட்டளைகளில் ஏதேன் கட்டளைகளுக்கு அமையாமல் விட சங்கத்தலைவன் உத்தரவுகொடுக்கக்கூடும்). ஆனால் தேள்வையென்று நினைத்தால், குதிரை மாலாய அல்லது மாட்டுக் கொட்டிலாய் அல்லது ஆடுமாடு தரிக்குமிடமாய் பாவிக்கப்படும் ஏதேன் கட்டிடத்தை கல்லால் அல்லது செங்கல்லால் அல்லது வேறு நிலைநிற்கக் கூடிய சாமான்களால் கட்டும்படியும் ஓட்டால் அல்லது இரும்புத் தகட்டால் கூரையைமேயும்படியும் சங்கத்தலைவன் கட்டளைசெய்யக்கூடும்.

4. ஒவ்வொரு குதிரை மாலையும் அல்லது மாட்டுக்கொட்டிலையும் அல்லது ஆடுமாடு தரிக்கு மிடத்தையும் ஒவ்வொரு நாளும் நல்லாய் துப்பரவுசெய்து துப்பரவாயும் சுகத்துக்கு ஏதுவான மாதிரியாயும் வைத்திருக்க வேண்டும். குடியிருக்கும் வீடுகளுக்கு தூரத்திலுள்ள சங்கத்தலைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு இடத்தில் ஒவ்வொரு நாளும் சாணியும் கஞ்சலும் அள்ளிக்கொண்டுபோய் கொட்டவேண்டும்.

5. சங்கத்து உஸ்தியோகஸ்தர்களால் அல்லது சங்கத்தலைவனால் அல்லது எழுத்தில் ஏற்படுத்தப்பட்ட வேறு ஆளால் எந்த நேரமும் சோதிக்கப்படுகிறதற்கு ஒவ்வொரு காலையும் ஏதுவாயிருக்கும். இந்தப் பிரமாணங்களின் தத்துவத்தால் சங்கத்தலைவன் செய்யும் கட்டளைகள் எல்லாம் எழுத்தில் இருக்கவேண்டும்.

## பாற்சாலைகள்.

1. இந்தச் சட்டங்களின் முகாந்தரத்திற்காக கமம், கமவீடு, மாட்டுமால், பாற்கிட்டங்கி, பாற்கடை, பால் செலவு செய்யும், ஸ்தலம், பால் சேகரிக்கப்பட்டு வைத்திருக்குமிடம், விற்பனவுக்காய் பால் வைத்திருக்குமிடம், இவைகளெல்லாம் பாற்சாலையென கருதப்படும். பசு வைத்திருப்போன். பால் விற்போன் பாற்சாலையை உடையோன், பலபேருக்குளதாயுள்ள பாற்சாலையின் தலைமைக்காரன் அல்லது அப்பேற்கொத்த பாற்சாலையை நடப்பிப்போன், ஆகிய இவர்கள் "பாற்காறன்" என்ற பெயரில் அமைவார்கள்.

2. ஒரு வழவில் திறந்த மலக்கிடங்கு அல்லது கிடங்கற்ற மலம் கழிக்குமிடத்துக்கு 100 அடிக்குள் பாற்சாலைகள் ஸ்தாபிக்கப்படக்கூடாது. அல்லது நச்சுக்காற்றுகள் கிட்டக்கூடிய இடங்களிலும் இருக்கப்படாது. ஓர் பாற்சாலையிலிருந்து 100 அடிக்குள் ஓர் திறந்த மலக்கிடங்கு அல்லது கிடங்கற்ற மலம்கழிக்குமிடம் கட்டப்படப் படாது.

3. ஒவ்வொரு பாற்சாலை, வழவிலும், சங்கத்தலைவனின் திருப்திக்குதக்க போதிய கான்கள் இருக்கவேண்டும். அக்கான்கள் கழுவப்பட்டிருக்க வேண்டும்.

4. பாற்சாலை வழவிலொன்றிலும் அழுக்கான நீர் தங்கிநிற்க விடப்படாது. பாற்சாலை வழவிலும் புறத்தியிலுமுள்ள குப்பை கூழங்களெல்லாம் தாமசமின்றி எடுக்கப்பட வேண்டும். சாணகம் தினமும் எடுக்கப்பட வேண்டும்.

5. ஒவ்வொரு பாற்சாலையின் பாவினைக்காக போதிய தூரத்தில் சுத்தமானவும் காப்பாற்றப்படவும் தண்ணீர் இருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட தண்ணீர்த்தலத்தில் அல்லது அருகில் குளிக்கவும் சீலைகழுவவும் படாது.

6. பால்கொடுக்கும் பசு அல்லது எருமை துன்பமற்றவர்களாயிருக்க வேண்டும். தொத்துவியாதியுள்ளவனை அல்லது பால்காறன் அறியக்கூடியதாய் கொஞ்ச காலத்துக்குமுன் அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனாய் இருந்தவனை அல்லது அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனை கொஞ்சகாலத்துக்கு முன்பராபரித்தவனை பாற்சாலையில் வேலைபார்க்கிறதற்கு எடுக்கப்படாது.

7. பால் கறக்குமுன் பசுக்களின் மடிகளும் முலைகளும் கழுவப்பட்டதோவென்று ஒவ்வொரு பாற்காறனும் பார்க்க வேண்டும். பால்கறக்கமுன் பால்கறப்போன் ஒவ்வொருவனும் தனது கைகளை சவுக்காரத்தாற் சுத்திசெய்யவேண்டும் சாணகம் அல்லது மூத்திர சலத்தால் பால் பழுதுபடாது எத்தனங்கள் செய்யவேண்டும்.

8. தண்ணீர், அல்லது அன்னிய பானம், அல்லது வஸ்துவைசேர்த்து பாற்காறனாவது பட்டிச்சொந்தக்காறனாவது பாலைப் பழுதாக்கப்படாது.

9. பாற்சாலையின் பாவிப்புக்காக அல்லது பாற்சாலைக்கு சொந்தமாயிருக்கும் தட்டுமுட்டுகளும் தளபாடங்களும் மற்ற அகத்தியமான சாமான்கள் எல்லாம் துப்பரவா யிருக்கவேணடும்.

10. பால் அனுப்பபடும் எல்லா பாத்திரங்களும் அதிநுட்பமான துப்பரவாயும், துப்பரவான தளபாடங்களினால் ஏற்றபடி மூடி, அடைத்து அல்லது குச்சிட்டை பண்ணியிருக்கவேண்டும். மேற்சொன்ன பாத்திரங்கள் கக்கத்திலும் கொண்டுபோகப்படாது. போத்தலின் வாய்களுள் விரல்போடப்படாது.

11. மாடுஆடு வைத்திருக்கும் மால் அல்லது இடங்கள் மாட்டுக்காலைகளுக்குரிய லோக்கல் போட் சங்கத்தின் 3 ப் கட்டளைக்கு அமைந்தும் திர்ப்தியா யிருக்கவேண்டும்.

12. ஒவ்வொரு பாற்சாலை லைசன்சுகாறன் பால்சேகரிக்கிறதற்காகவும் பால்ஆயத்தப்படுத்துகிறதற்காகவும் லோக்கல் போட் சங்கத் தலைவரின் திருப்திக்கு தக்க இடத்திலும் மாட்டு மாலிலிருந்து கூறப்பட்ட தூரத்திலும் ஒரு பால் அறை கட்டுவிகக வேண்டும். இவ்வறையில் தொளிலில் பாவிக்கப்படும் தளபாடங்கள் எல்லாம் துப்பரவுபண்ணின பிற்பாடு வைக்கப்படவேண்டும். நிலம் சிமேந்தால் மூடியதா யிருக்கவேண்டும். நிலமும் சிவரும் பொருந்தும் மூலை வளைந்திருக்க வேண்டும். சுவர்கள் சாந்தால் மூடப்பட்டதாயும் அல்லது அழுத்தமான பலகையால் அல்லது இரும்பால் செய்யப்பட்டனவாயும் இருக்கவேண்டும். சங்கத்தலைவன் அல்லது "சீனியர் சனிற்றரி ஆபீசர்" குறித்தபடி காலத்துக்குககாலம் இவர்கள் சுண்ணாம்பினால் வெள்ளை அடிக்கப்பட்டு அல்லது மை பூசப்பட்டு இருக்க வேண்டும். பால்அறையின் எதிர் இரண்டு சுவராவது காற்றுப்படக்கூடிய சார்பிலிருக்கவேண்டும். தூசிவராமல் கூரைகள் எல்லாம் சுரங்கமறுத்த மச்சுப்பலகையால் அடைத்திருககவேண்டும். ஒரு சன்னலும் ஒரு கதவாவதும் இருக்கவேண்டும். கண்ணாடியில்லாத அல்லது மூடியில்லாத 3 × 2 அடி நீளஅகலமுள்ள யன்னல் இலையான் போகாத வலைப்பின்னலால் மூடியிருக்கவேண்டும். கதவு யன்னலை எதிர்பார்த்தும் இறுக்கமாய் மூடக்கூடியதாயும், இலையான் போகாத வலைப் பின்னல் முட்டியும் பூட்டியும் இருக்கவேண்டும். பாற்சாலையில் மார்பிள் கல்லால் அல்லது கற்பலகையால் அல்லது துத்திநாகத்தினால் அல்லது சுவறக்கூடாத வஸ்துவினால் மூடப்பட்ட மேசை வைக்கவேண்டும். பால் சேகரிக்கிறதற்காகவும் ஆயத்தப்படுத்துகிறதற்காகவும் ஒளிய வேறு ஒரு முகாந்தரத்துக்காகவும் இந்த அறை பாவிக்கப்படாது.

13. லோக்கல்போட் சங்கத்தலைவனாலும் சீனியர் சனிற்றறி ஆபீசர் அல்லது அவரின் துணைவர்களினாலும் எல்லா வேளையிலும் பரிசோதிக்கக்கூடியபடி பாற்சாலையின் லைசன்சுகாறன் தன்னுடைய வாடிக்கைகாறர்களின் டாப்பு ஒன்று வைத்திருக்க வேண்டும்.

14. லைசன்சு பத்திரத்தில் பாற்சாலையில் வைத்திருக்கக்கூடிய மாடுகளின் தொகை அப்பேர்ப்பட்ட லைசன்ஸில் கூறியிருக்கவேண்டும்.

15. பாற்சாலை லைசன்சுகாறன் சங்கத்தலைவனின் உத்தரவில்லாமல் பாற்சாலையின் நிலயத்தை மாற்றப்படாது. லைசன்சு கொண்ட இடத்தைவிட வேறுஒரு இடத்திலாவது பால்கறக்கப்படாது.

16. ஒவ்வொரு லைசன்சுகாறனும், பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர் ஒவ்வொரு முறையும் தங்களுடைய றிப்போட்டுகளை எழுதுகிறதற்காக பாற்சாலையில் ஓர் றிப்போட் புஸ்தகம் வைக்கவேண்டும்.

17. லொக்கல் போட் சங்கத்தின் பட்டண எல்லைக்குள் இருக்கும் ஒவ்வொரு பாற்சாலையும், லோககல் போட் சங்கத்தின் எல்லைக்குள் இருக்கும் வாசிகளுக்கு லோக்கல்போட் சங்கத்தின் எல்லைக்குள் இராத பால்கொடுக்கும் பாற்சாலையும் லோக்கல் போட் சங்கத்லைவனால் பதிவுபண்ணப்பட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்காறனுக்கு அவனுடைய பெயரும் இலக்கமும் பதிந்த ஓர் சீட்டு கொடுக்கப்படும். சங்கத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தராலும் சுகாதார இன்ஸ்பெக்றர்மாராலும் இச்சீட்டுகள் பார்க்கும்படி கேட்டால் காட்டப்படவேண்டும்.

18. லோக்கல் போட் சங்கத்தின் எல்லைக்குள் லைசன்சுபெற்ற பாற்சாலையிலிருந்து அல்லது பால்விற்பவனிடமிருந்து அல்லது விற்பனவுக்காக வெளியாய் வைத்திருப்பவனிடம் இருந்து பால் சோதிக்கிறதற்காக எல்லாவேளையிலும் ஒரு சாம்பில் போத்தல் பால் எடுக்க லோக்கல் போட் சங்கத்தலைவனுக்கு, சீனியர் சனிற்றரி ஆபீசருக்கு அல்லது அவருடைய துணைவர்களுக்கும் டிஸ்திறிக்கின் பிரதான தலைமைக்காறனுக்கும் அல்லது எந்த லோக்கல் போட் பட்டணத்தின் எல்லைக்குள் சுகாதார பரிசோதனைக்காக லோக்கல் போட் சங்கத்தலைவனால் அல்லது சீனியர் சனிற்றரி ஆபீசரால் நியமனம்பெற்ற இன்ஸ்பெக்றருக்கும் அதிகாரம் உண்டு.

19. லைசன்சு முடித்த பாற்சாலைகளின் வேலைகாரரைத் தவிர வேறொருவரும் பட்டணத்து எல்லைக்குள் பால் விற்கவும்படாது விற்கிறதற்காக வைத்திருக்கவும்படாது. ஆனால் பால் விற்கிறதற்காக சங்கத்தால் லைசன்டு கொடுப்பட்டவர் பால் விற்கலாம். அப்படி கொண்டு திரிந்து விற்கிற ஒவ்வொருவரும் சங்கத்தால் கொடுக்கப்பட்ட பட்டயம் ஒன்று வைத்திருக்க வேண்டும்.

20. ஒவ்வொரு பாற்சாலையிலும் இந்தப் பிரமாணங்களின் கொப்பி தூக்கியிருக்க வேண்டும்.

## புடவை கழுவும் துறைகள்.

1. இந்த சட்டங்களின் முகாந்திரத்திற்காக கூலிக்கு மற்றவர்களின் புடவைகளை கழுவும் தொழில்பார்க்கிறவனால் வசிக்குமிடம் "புடவைகழுவும் துறை" யெனக் கருதப்படும் மேற்சொல்லப்பட்ட வேலைபார்ப்போன் அல்லது அவனுடைய வேலைக்காறன் அல்லது அப்பேர்ப்பட்ட ஆளின் துணைவன் புடவைகழுவுகிறவன் எனக் கருதப்படுவான்.

2. ஊத்தைப்பிடவைக்காக பிறம்பான அறை லோகல்போட் சங்கத்தலைவன் வைக்கச்சொல்லிக் கற்பித்தால் வைக்கவேண்டும். காற்றுஉலாவ இடம்பண்ணப்பட்டும் எப்பொழுதும் துப்பரவாயும் வருஷத்துக்கு இரண்டுமுறை சுண்ணாம்பினால் வெள்ளையடித்திருக்க வேண்டும்.

3. ஆட்கள் வசிக்கும் எந்த அறையிலாவது ஊத்தைப்புடவை வைக்கப்படாது.

4. லோக்கல் போட் சங்கத் தலைவன் ஊர்நயத்துக்காகவும் புடவைகள் கழுவுகிறதற்காக விசேஷமான இடங்களை தேவையென்று காணும்பொழுது அப்பேர்பட்ட இடங்களை நியமனம்பண்ணுவான் அறிவித்தல்பலகையால் அப்பேர்பட்ட இடங்கள் காண்பிக்கப்படும்.

5. பொலிஸ் தலைமைக்காறனால் அல்லது லோக்கல் போட் இன்ஸ்பெக்றர் மூலமாய் லோக்கல் போட் தலைவனுக்கு 24 மணித்தியாலத்துக்குள் புடவைகழுவுவோன் அல்லது அவன் குடும்பத்தின் அல்லது வீட்டாட்களுக்கு தொற்றுநோய் பிடித்திருந்தால் அவன் அறிவிக்கவேண்டும்.

6. புடவைகழுவுவோன் அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டாளுக்கு தொற்றுநோயால் பீடித்திருந்தால் புடவைகழுவுந் துறையில் எல்லாவேலையும் நிற்பாட்டவேண்டும். லோக்கல் போட் சங்கத் தலைவரின் உத்தரவு இல்லாமல் புடவை கழுவுந் துறைக்கு அல்லது அங்கிருந்து வெளியே அவ்வியாதி துவங்கினதின்பிற்பாடும் நடக்கும்பொழுதும் புடவைகள் கொண்டுபோகப்படாது.

7. லோக்கல் போட் தலைவனின் அல்லது சீனியர் சனிற்றரி ஆபீசரின் உத்தரவில்லாமல் எந்த வீட்டிலாவது அவ்வீட்டிலிருக்கும் ஆரும் ஒருஆள் தொத்துவியாதியால் பீடிக்கப்பட்டு நோயாளியாய் யிருக்கிறதென்று நம்ப நியாயம் இருந்தால் அவ்வீட்டிலிருந்து ஊத்தை உடுப்பு எடுக்கப்படாது.

8. லோக்கல் போட் சங்கத் தலைவனால் அல்லது சீனியர் சனிற்றரி ஆபீசரால் அல்லது அவன் துணைவனால் யார்யாருக்குப் புடவை கழுவுகிறான் என்று கேட்டால் சீலைகழுவுவோன் அப்பேர்ப்பட்டவர்களுடைய பெயர்களை கொடுக்க வேண்டும்.

## பொது விடுதிவீடுகள்.

1. இந்த சட்டங்களின் முகாந்திரத்திற்காக கூலிக்காக ஓர் குடும்பத்துக்குச் சேராத 4 அல்லது அதைவிட கூட ஆட்கள் ஒரு வீட்டில் அல்லது ஒரு வீட்டின் பகுதியில் குடியிருந்தால் அப்பேர்ப்பட்ட வீடுகள் பொது விடுதிவீடுகளெனக் கருதப்படும்.

2. உறுதியாய்க் கட்டப்பட்டும் நல்ல நிலபரமாயும் பழுதுபார்த்தும் பொது விடுதிவீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். லோக்கல் போட் சங்கத் தலைவனின் திருப்திக்கு ஏற்றபடி படுக்கும்அறைகள் காற்று உலாவக்கூடியதாயும் வெளிச்சம் விளக்கூடியதாயும் இருக்கவேண்டும். வருஷத்தில் 3 தடவை பொது விடுதிவீட்டின் சுவர்களை வெள்ளைபடித்திருக்கவேண்டும்.

3. எல்லா வேளையிலும் இடத்தை துப்பரவாயும் லோக்கல் போட் நிலபரத்திலும் பொது விடுதிவீட்டை வைத்திருப்போன் அவர்களை வைத்திருக்க வேண்டும். வீட்டுப் பிறங்களிலிருந்து எல்லா ஊத்தைகளையும் துர்நாற்றம் கொடுக்கும் பொருட்களையும் எடுத்துப்போட வேண்டும்.

4. பொது வீட்டிலிருப்பவன் யாராகினும் தொற்றுவியாதியால் பீடிக்கப்பட்டால் வீட்டுக்காறன் அல்லது அப்பேர்ப்பட்டோன் சனிற்றரி இன்ஸ்பெக்றர் அல்லது பொலிஸ் தலைமைக்காறனின் மூலமாய் அறிவிக்கவேண்டும். விடுதி வீட்டை விடுதலையாக்கிறதற்கும் படுகைச் சாமான்களையும் உடுப்புகளையும் மற்றும் சாமான்களையும் சுத்திசெய்யவும் அளிக்கவும் வீட்டுக்குப் புகைகாட்டவும், சுத்திகரிக்கும் மருந்துபோடவும், வீட்டை சுண்ணாம்பினால் வெள்ளையடிக்கவும் சரியான ஆள் கட்டளைக்கு அமைந்து நடக்கவேண்டும்.

5. வீட்டிலிருப்போருக்கு போதிய மலங்களிக்குமிடமும் அதை லோக்கல் போட் நிலைபரத்தில் வைக்கவும் பொது விடுதி வீட்டை வைத்திருப்போன் பாத்திரவாளியாவான்.

6. எந்த விடுதிவீட்டிலாவது இருக்கக்கூடிய மொத்த ஆள் தொகையை லோக்கல் போட் தலைவரால் தீர்மானிக்கத் தத்துவம் உண்டு. லைசன்சில் இத்தொகையைக் காட்டியிருக்கவேண்டும். இத்தொகைக்குக்கூட ஆட்கள் இருந்தால் விடுதிவீடு வைத்திருப்போன் குற்றத்துக்கு ஏதுவாயிருப்பான். இச்சட்டத்துக்காக 12 வயதுக்குட்பட்ட இரண்டு பிள்ளைகள் ஒரு ஆளாக கவனிக்கப்படும்.

7. எல்லா வேளையிலும் பொதுவிடுதிகள் பரிசோதிக்கிறதற்காக லோக்கல் போட் சங்கத் தலைவரால் அல்லது சீனியர் சனிற்றரி ஆபீசரால் அல்லது அவருடைய துணைவரால் அல்லது டிஸ்திறிக்கின் பிரதான தலைமைக்காரனால் பொது விடுதிகள் இருக்கும் லோக்கல் போட் சங்கத்தின் பட்டணத்தில் சுகாதார பரிசோதனைக்காக லோக்கல் போட் சங்கத்தலைவனினால் அல்லது சீனியர் சனிற்றரிஆபீசரினால் நியமனம்பெற்ற இன்ஸ்பெற்றரால் பொது விடுதிவீடுகள் சோதிக்கப்படுகிறதற்கு ஏதுவாயிருக்கும்.

## பிரசித்த குளிக்குமிடங்கள்.

1. ஒழுங்குகளின் நிமித்தம் ஒரு குளிக்குமிடமாவது, பொது ஜனங்கள், அல்லது ஏதாவது ஒரு குறித்த ஜாதி ஜனங்கள், பணங் கொடுத்தாவது அல்லது கொடாமலாவது, குளிக்குமிடம், அல்லது லோக்கல் போட் சங்கத்தின் இரண்டாம் ஒழுங்கின்படி விசேஷமாய்க் குறிக்கப்பட்ட இடமெனக் கருதும்.

2. லோக்கல் போட் சங்கம் தன் சுயாதீனத்துக்கு கீள் இருக்கும் ஒரு பிரசித்த இடத்தை, பொது ஜனங்கள் குளிக்குமிடமாகத் தீர்மானித்து அப்படிப்பட்ட பிரசித்த குளிக்கு மிடங்களின் எல்லைகளையும் குறிக்கலாம்.

3. ஏதாவதொரு பிரசித்த குளிக்குமிடத்தின் சொந்தக்காறன் அல்லது வைத்திருப்போனுக்கெதிராக ஒரு குற்றஞ் சாட்டப்பட்டால், அப்படிப்பட்ட சொந்தக்காரன் அல்லது வைத்திருப்போன் லோக்கல் போட் தலைவரின் உத்தரவுப் பத்திரம் (லைசன்ஸ்) இன்றி ஒரு பிரசித்த குளிக்குமிடத்தை வைத்திருத்தலாகாது; சொல்லிய ஒழுங்குகளுக்கு அல்லது லோக்கல் போட்டி னிப்போயிருக்கும் ஒழுங்குகளுக்கு மாறாக நடப்போர்களுக்கு இந்த உத்தரவுப்பத்திரத்தை (லைசன்ஸ்) கொடுக்காமலிருக்க சங்கத்தலைவர் இதனாற் தத்துவங்கொண்டிருக்கிறார். லோக்கல் போட் சங்கம் காலத்துக்குக்காலம் தீர்மானித்து சங்கத்தில் தேசாதிபதியவர்கள் நியமனம்பண்ணும் சலாருக்கு இவ்வுத்தரவுப்பத்திரம் (லைசன்ஸ்) கட்டுப்படும்.

4. இவ் வொழுங்குகளுக்கு மாறாக யாராவது இருமுறை அல்லது பலமுறை நடந்து ஒரு நியாயஸ்தலத்தில் தண்டனை விதிக்கப்பெற்றால், இவ்வதிகாரத்தின்படி லோக்கல் போட் சங்கத்தின் சங்கத்தலைவர் கொடுத்த உத்தரவுப்பத்திரத்தை (லைசன்ஸ்), இரண்டாம் அல்லது அடுத்தமுறை தண்டனைசெய்யும்போது, லைசன்சை அழித்துவிடுவது ஒழுங்காயிருக்கும். அப்படியாகக் குற்றப்பட்டவனுக்கு, லோக்கல் போட் சங்கத்தலைவர் தன் விருப்பத்தில், நியாயஸ்தலத்திலழிக்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்துக்கு (லைசன்ஸ்) புதிதாக உத்தரவுப்பத்திரம் கொடுக்காமலிருக்க அதிகாரமுடைத்தாயிருக்கிறார்.

5. இவ்வொழுங்குகளின் பிரமாணங்களைச் செய்துமுடிக்க யாதொரு பிரசித்த குளிக்குமிடத்தின் சொந்தக்காரனும் வைத்திருப்போனும் கடமைப்பூண்டிருக்கிறான்.

6. எவ்விடத்திலாவது ஒரு குளிக்குமிடம், ஒரு கிணற்றினால் உதவப்பட்டிருக்குமாயின், அக்கிணற்றைச் சுற்றி இரண்டடியாவது உயரமுள்ள ஒரு சுவர் அதைச் சுற்றிக் கட்டியிருக்கவேண்டும். சுவரில்லாமலிருக்குமாயின் லோக்கல்

போட் சங்கத்தலைவருடைய அனுமதிபெற்ற படத்தின்படியும், கிணற்றினின்றும் கழுவுதற்காக அள்ளும் தண்ணீர், கிணற்றுக்குள் போகாதபடியும் கட்டவேண்டும். கிணத்தை சுற்றியிருக்கும் நிலம் சரிவாகவும் திடப்படுத்தியும் சங்கத்தலைவர் மனத் திருப்திப்படக்கூடிய மாதிரியாய் ஊத்தைத்தண்ணீர் கிணற்றுக்குள் செல்லும் வழியில்லாமல் கூடிய தூரத்துக்குக் கான் வழியாய் ஓடவேண்டும்.

7. மரவாளிகள் உபயோகப்படுத்தப்படுமாயின் அவைகளை நாள்வீதம் துப்பரவுபண்ணியும் வருஷத்துக்கிருமுறை மை பூசவும் வேண்டும். ஒரு பெரும் வக்கில் அல்லது வாளியில் தண்ணீர் நிரப்புவதாயின், அத்தண்ணீர், நிலையாய் நின்று மனுஷர் குளிக்கிறதற்கு தகுந்ததாய்ப் போகாதவண்ணம் அடிக்கடி மாற்றவேண்டும்.

8. யாராவதொருவர் பிரசித்த குளிக்குமிடம் வைத்திருப்போனுக்குத் தெரிய, தொற்றுநோய் வியாதியில் வாதைப்பட்டு, அல்லது தொற்றுநோய் வாதைப்பட்டவர்களைத் தாபரித்த பிரசித்த குளிக்குமிடத்தில் குளிக்க அல்லது கழுவ அல்லது வேறெவ்விதமாயாவது தண்ணீரைப் பாவிக்க ஏலாதெனவும், அப்படியாகில், பிரசித்த குளிக்குமிடத்திலிருந்து ஞாயமான தூரத்துக்கப்பால், தேகசவுக்கியமுள்ள ஒருவன் அள்ளிக்கொடுத்தால் மாத்திரம் அவன் உபயோகிக்கக்கூடும்.

9. கிணற்றுத் தண்ணீரினால் உதவப்பட்டுவரும் பிரசித்த குளிக்குமிடம், ஒருவரும் தானணிந்திருக்கும் உடுப்புகளைத்தவிர மாடாடு அல்லது மற்றும் மிருகங்களை, பாய், வேறேதும்சாமான்களை அல்லது வேறு உடுப்புகளை கழுவ முடியாது. அப்படி அணிந்திருக்கும் உடுப்புகளைத் தோய்ப்பதும், அதிலிருந்து தண்ணீர் கிணற்றுக்குள் தெறியாத தூரத்திலிருந்து தோய்க்கவேண்டும். லோக்கல் போட்சங்கத்தலைவரினால் பிரசித்த குளிக்குமிடங்களாகக் குறிக்கப்பட்ட இடங்களுக்கும், கையினால் இடைக்கிடை மாறறப்படும் தண்ணீர் வக்குகளுக்கும், 9 ம் ஒழுங்கின் பிரமாணம் அமையும்.

10. ஏதாவதொரு பிரசித்த குளிக்குமிடத்துக்குக் கிட்டவாவது ஒருவனும் மலசலம் கழித்து அல்லது மற்று வேறெவ்விதமாயாவது சச்சரவுபண்ணக்கூடாது.

வாவிகளில் அல்லது ஆறுகளில், தேங்காய் மட்டை நனையப்போடும் காலைகள்.

1. லோக்கல்போட் சங்க எல்லைக்குள், ஒரு வாவியிலாவது ஆற்றிலாவது, லோக்கல்போட் சங்கத்தலைவரின் உத்தரவுப்பத்திரம் (லைசன்ஸ்) இல்லாமல் தேங்காய் மட்டை நனையப்போடுவதுநிமித்தம் ஒருவனும் காலைகட்ட அல்லது பாவிக்கக் கூடாது; பின்வரும் ஒழுங்குகளைக் கைகொள்ளாத ஒருவனுக்கு உத்தரவுப்பத்திரம் (லைசன்ஸ்) கொடுக்காதிருக்க இத்தால் சங்கத்தலைவர் தத்துவம் கொண்டிருக்கிறார். லோக்கல்போட்சங்கம் காலத்துக்குக்காலம் தீர்மானித்துச் சங்கத்தில் தேசாதிபதியவர்கள் நியமனம் பண்ணும் சலாருக்கு இவ்வுத்தரவுப்பத்திரம் (லைசன்ஸ்) கட்டுப்படும்.

2, இவ்வொழுங்குகளுக்கு மாறாக இருமுறை அல்லது பலமுறையாவது ஒரு நியாயஸ்தலத்தில் மாறாக நடந்து தண்டனை விதிக்கப்பெற்றால் இவ்வதிகாரத்தின்படி லோக்கல்போட் சங்கத்தின் தலைவர் கொடுத்த உத்தரவுப்பத்திரத்தை (லைசன்ஸ்) இரண்டாம் அல்லது அடுத்தமுறை தண்டனை செய்யும்போது அழித்துவிடுவது ஒழுங்காயிருக்கும்: அப்படியாகக் குற்றப்பட்டவனுக்கு லோக்கல்போட் சங்கத்தலைவர் தன் விருப்பத்தில் நியாயஸ்தலத்தி லழிககப்பட்ட உத்தரவுப் பத்திரத்துக்கு (லைசென்ஸ்) புதிதாக உத்தரவுப் பத்திரம் கொடுக்காமலிருக்க அதிகார முடைத்தாயிருக்கிறார்.

3. லோக்கல்போட் சங்கத்தலைவர் உத்தரவுப்பத்திரத்தில் (லைசன்ஸ்) அக்காலைகளின் விசாலத்தையும் இடத்தையும் சுட்டிக் காட்டத் தத்துவம் பெற்றிருக்கிறார். உத்தரவுப்பத்திரத்தில் (லைசன்ஸ்) காட்டிய விசாலத்துக்கு மாறாகக் காலையைக் கட்டு மல்லது பாவிக்கும் ஒவ்வொருவனும் குற்றத்துக்கு ஆளாகுவான்.

விக்கினமானவும், அருவருக்கப்படவும்தக்க தொழில்கள்.

1. இக்கட்டளைச்சட்டங்களின் முகாந்தரத்திற்காக பின்வருகிறதெல்லாம் விக்கினமானவும் அருவருக்கப்படவும் தக்க தொழிற்களென்று கருதப்படும்:—

செயற்கையான பசளை சேகரித்தல் அல்லது ஆக்குதல்; இரத்த மல்லது எச்சிலவித்தல்; இரத்தத்தை அல்லது எச்சிலையை உலர்த்தல்; தோல் பதனிடுதல்; கொழுப்புருக்குதல்; கொழுப்பு வடித்தல்; சவர்க்காரம் செய்தல்; தென்னை மட்டை ஊறவைத்தல்; தும்புக்குச் சாயம் தோய்த்தல்; இயந்திர உதவியால் தேங்காய் எண்ணை வடித்தல்; தும்பு சேகரித்தல் அல்லது ஆக்குதல்; தோல், எலும்பு, செயற்கையான பசளை, அல்லது செயற்கையான பசளையாக்குவதற்கு வேண்டிய பொருட்கள் சேகரித்தல்; 5 அந்தர் நிறைக்கு மேற்பட்ட மாசு (மாலைதீவு மச்சம்) சேகரித்துவைத்தல்; கருங்கல்; "கபுக்" என்னும் கூழாங்கல், "கிறவல்" என்னும் போளாங்கல் எடுப்பதற்கு நிலம் கிண்டுதல்; செங்கல்லு, ஓடு செய்தல்; சுண்ணம்பு நீற்றுதல்; சோடா லெமனேட் செய்தல்; மின்னரம் நீற்றல் அல்லது சேகரித்துவைத்தல்.

2. லோக்கல்போட்சங்கத்தின் எல்லைகட்குள்ளே உள்ள எந்த நிலத்தை அல்லது வழவையுடையோன் அல்லது ஆட்சிசெய்வோன், அவ்வழவில் அல்லது நிலத்தில், விக்கினமான அல்லது அருவருப்புடைய எந்த வியாபார அல்லது கைத்தொழிலை, லோக்கல்போட் சங்கத் தலைவனின் உத்தரவின்றி நடாத்தவும், நடாத்தும்படி விடவும்படாது. மேலும், இதிற் கூறிய அல்லது முன் நிரூபிக்கப்பட்ட லோக்கல்போட் சங்கத்தின் எக்கட்டளைச்சட்டத்துக்காவது உடன்படாத ஒருவனுக்கு அவ்வித லைசென்ஸ்சை கொடாது விடுதற்கு லோக்கல்போட் சஙகத்தலைவனுக்குத் தத்துவமுண்டு. தேசாதிபதியாரினதும் சங்கத்தினதும் அனுமதிப்படி காலத்துக்குக்காலம் லோக்கல்போட் சங்கம் விதிக்கும் சலார்கள் அவ்வித உத்தரவுச்சீட்டுப் பெறுதற்குக் கட்டப்படவேண்டும்.

3. இக்கட்டளைச்சட்டங்களில் யாதொன்றையாவது மீறியதற்கு இரண்டு அல்லது பலமுறைகளிலே குற்றவாளியென்று ஒருவன் கோட்டாரால் தீர்க்கப்பட்டால், அந்த இரண்டாவது அல்லது அதன்பின் நிரூபிக்கப்படும் தீர்ப்பை எழுதும்கோட்டார், இவ்வதிகாரத்தின்கீழ் லோக்கல்போட்சங்கத்தலைவனால் அவனுக்குக்கொடுக்கப்பட்ட லைசென்சை அழிப்பது நீதியுள்ளதாயிருக்கும். ஒரு கோட்டால் ஒரு லைசென்ஸ்சு அழிக்கப்பட்டதின்பின், அப்பேர்க்கொத்த ஒருனுக்கு ஓர் புது லைசென்ஸ்சை தான் எண்ணியபடி கொடாதல் விடுதற்கு லோக்கல்போட் சங்கத்தலைவனுக்கு தத்துவமுண்டு.

4. மேற்கூறிய வியாபாரங்கள், முயற்சிகள், கைத்தொழில்களை நடாத்துவதற்கு வேண்டிய சாமான்களெல்லாம் அவைகளிடமிருந்து பரமாணு புறப்படாமலும் தொந்தரவுக்குக் காரணமாக இராமலும் தக்கவிதமாய் சேர்த்துவைக்கப்படவேண்டும். பரமாணு புறப்படக்கூடியவும் அருவருப்புக்குக் காரணமாயிருக்கக்கூடியவுமான சாமான்கள் யாதோர் அதிக போக்குவரவான வழியால் கொண்டுவரவெண்டியதாயிருந்தால் அவைகளெல்லாம் உறிஞ்சக்கூடாத மூடப்பட்ட கொள்கலங்களில் அல்லது யாதோர் வசதியீனமுண்டாகாதவண்ணம் சங்கத்தலைவன் குறிக்கும் மாதிரியாகக் கொண்டுபோகப்படவேண்டும்.

5. இவைகள் செய்யப்படும்பொழுது வெளிவரும் அருவருப்புள்ள வாயு அல்லது ஆவி மோசமற்றவையாயிருக்கும்வண்ணம் சித்தியாகக்கூடிய எத்தனங்கள் செய்யப்படவேண்டும். அவ்வித வாயு அல்லது ஆவிகள் ஒன்றில் வெளியில் போய் கெடுதி அல்லது சேதம் விளைவிக்காது, வேண்டிய உயரத்திலும் தக்க மாதிரியாகவும் வெளிக்காற்றிலே தள்ளுப்படவேண்டும், அல்லாவிடில் நேரே நெருப்புக்கூடாய் அல்லது ஓர் கணிகரணம்செய்யும் கருவிக்குள்ளே போக்குப்படவேண்டும். எல்லா வளவுகளிலேயும் வேண்டிய கான்களிருக்கவேண்டும். அக்கான்கள் அதிக ஒழுங்காகவும் தினமும் கழுவப்படவும் வேண்டும்.

6. தரைகள் உடைவு பழுதில்லாது காப்பாற்றப்படவேண்டும். அவைகள் தினமும் துப்பரவுசெய்யப்படவேண்டும். சங்கத்தலைவர் கட்டளைப்படியும் அவர் குறிக்கும் சுவறக்கூடாத வஸ்துவினாலும் அத்தரைகள் கட்டுப்படவேண்டும்.

7. அழுக்கை உறிஞ்சாவண்ணம் சுவர்கள் எல்லாம் ஒழுங்காக வைத்திருக்கப்படவேண்டும். அவைகள் வருஷத்துக்கு இரண்டு முறை அல்லது லோக்கல்போட் சங்கத்தலைவன் அல்லது முதற் சுகாதார ஆபீசர் செய்யும்படி கட்டளையிட்டால் அடிக்கடி வெள்ளை அடிபடவேண்டும்.

8. ஆயுதங்கள், பாத்திரங்களடங்கிய கருவிகளெல்லாம் துப்பரவாக வைத்திருக்கப்படவேண்டும், கூடுமானால் தினமும் சுத்திபண்ணப்படவேண்டும். கழிவு, குப்பை, சீவுத்துண்டுகள், அழிவு சாயத்தோலிலுண்டான பொருட்கள்,

வளவிலேயே வேறு வியாபார முயற்சிக்கு உடனே உபயோகிக்கப்பட்டாற்சரி, அல்லாவிடில் தினமும் வளவிலேயிருந்து நீக்கப்படவேண்டும்.

9. தோல் அல்லது வேறு வஸ்துக்கள் கழுவுவதற்கு அல்லது நனையவைப்பதற்கு உபயோகிக்கப்படும் வக்குகள் பரமாணு புறப்படாவண்ணம் வேண்டிய நேரமெல்லாம் வெறுமையாக்கவும் துப்பரவுபண்ணவும்படவேண்டும்.

10. எந்த அருவருப்பான முயற்சியை அல்லது கைத்தொழிலை நடாத்துவோன், அல்லது அப்பேர்க்கொத்த அருவருப்புள்ள முயற்சி அல்லது கைத்தொழில் செய்யப்படும் நிலத்தை அல்லது வளவை உடைத்தோன் அல்லது ஆட்சி செய்வோன், யாதோர், அழுக்கான துர்நாற்றமுள்ள அருவருப்பான நீரை அல்லது வேறு ஜலத்தை அதனுள் செலுத்துதலால் அல்லது ஓடவிடுதலால் அல்லது அங்கே யாதோர் அருவருப்பான வஸ்துவை கழுவ விடுதலால் அல்லது வேறென்னவிதமாகவாவது ஓர் ஆற்றையாவது, நீரோட்டத்தையாவது, வெட்டாறையாவது, வாய்க்காலையாவது, கிணற்றையாவது, குழத்தையாவது, தடாகத்தையாவது அசுசிப்படுத்தப்படாது.

11. மேற்சொல்லிய தொழில்கள் நடத்தும் வழவுகள் லோக்கல்போட் சங்கத் தலைவனால் அல்லது அவரால் தத்துவமழிக்கப்பட்ட வேருராலாவது சோதிக்கப்படுவதற்கு ஒப்பத்தக்க வேளைகளில் திறபட்டிருக்க வேண்டும்.

12. செங்கல்லு, ஓடு, கட்டிடவேலை அல்லது வேறென்ன முகாந்திரத்திற்காவது, களிமண், மண், கல்ல, "இறவல் கபுக்" அல்லது வேறென்ன வஸ்துஆவது கின்றி எடுக்கப்படும் நிலத்தை உடையோன் அல்லது ஆட்சிசெய்வோன் அங்கே வேண்டிய கான்கள் உண்டோவென்றும். அந்த குளிகளுள்ளும் அகள்களுள்ளும் தண்ணீர் தங்கிநில்லாவண்ணம் மூடப்பட்டிருக்கிறதோவென்றும் பார்க்க வேண்டும்.

உத்தம தேசாதிபதி சங்கத்தின் அனுமதிக் குட்பட நீர்கொழும்பு டிஸ்திறிக்கின் லோக்கல்போட் சங்கம் 1914 ம் ஆல் 13 ம் கட்டளைச் சட்டத்தின் 29A பிரிவினால் தத்துவமுள்ளபடி பின்வரும் சலார்களை உத்தரவுச் சீட்டுகளுக்கு விதிக்கத் தீர்மானித்திருக்கிறது.

| | வருஷாந்த சலார் ரூ. | ச. |
|---|---|---|
| அப்பப் போறணைகள் .. .. | 6 | 0 |
| சாப்பாட்டு வீடுகள் .. .. | 3 | 0 |
| தேதண்ணி, கோப்பிகடைகள் .. .. | 3 | 0 |
| மாடுக்காலை, 10 அல்லது அதின் குறையவுள்ள மிருகங்கள் . .. .. | 5 | 0 |
| ஒவ்வொரு மேலதிக்மான 10 மிருகங்களுக்கும் ரூபா 5 துவங்கி ரூபா 100 மட்டும் | | |
| பாற்சாலைகள் (3 அல்லது அதற்குக் குறையவுள்ள மாடுகளுக்கு .. .. | 3 | 0 |
| 3 மாடுகளைவிட மேலதிகமாய் இருந்தால் .. | 6 | 0 |
| புடவை கழுவுந் துறைகள் .. .. | 3 | 0 |
| பொது விடுதிவீடுகள் .. .. | 6 | 0 |
| பேசழை செய்யப்படுமிடம் .. .. | 100 | 0 |
| இரத்தம் அல்லது எச்சிலை அவித்தல் அல்லது உலர்த்தல் .. .. .. | 100 | 0 |
| தோல் பதனமிடு மிடம் .. .. | 100 | 0 |

| | வருஷாந்த சலார் ரூ. | ச. |
|---|---|---|
| கொளுப்பு உருக்குதல் அல்லது வடித்தல் .. | 50 | 0 |
| சவர்காரம் செய்யுமிடம் .. .. | 50 | 0 |
| தென்னமட்டை ஊறவைக்குந் தலம் .. | 3 | 0 |
| தும்புக்கு நிறம் தோய்க்குமிடம் .. .. | 2 | 50 |
| இயந்திர உதவியினால் தேங்காய் எண்ணெய் வடிக்குமிடம் .. .. .. | 100 | 0 |
| தும்புசெய்கிறதும் சேகரிக்குமிடம் .. | 25 | 0 |
| 5 அந்தருக்கு மேலாக (மாஸ்) மாலைதீவு மீன் சேகரிக்குமிடம் .. .. | 5 | 0 |
| தோல், எலும்பு, செயற்கை பசளைகள் அல்லது ஒரு சாக்குக்கு மேலதிகமாயுள்ள செயற்கைப் பசளைகளைச் செய்யும் பொருட்கள் சேகரிக்குமிடம் .. | 10 | 0 |
| சுண்ணும்பு சூளைகள் .. .. | 12 | 0 |
| சோடா லெமினற் செய்யுமிடம் .. .. | 100 | 0 |
| பிரசித்த ஸ்னன தலங்கள் .. .. | 6 | 0 |

கவனிப்பு.—சாப்பாட்டு வீடுகளினதும் தேயிலை கோப்பிகடைகளினதும் பொது விடுதிவீடுகளினதும் சீலைகழுவுகிற இடங்களினதும் பிரசித்த ஸ்னன இடங்களினதும் அரை வருஷத்தின் சலார்கள் முற்பணமாய்க் கட்டலாம்.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 6,837, மன்னார்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஆல் (மே) வைகாசிமீ 3 ந தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சட்டிய காணிகளின் விவரம்.

வடமாகாணம் மன்னார் டிஸ்திறிக் மன்னார்தீவு மன்னார் கிழக்கைச்சேர்ந்த மன்னார் பட்டணத்தில் பறங்கித்தெரு என்னும் பிரிவினுள்ள இத்துடனணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—மன்னார்பட்டண அளவை.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 22B | வெளிநிலம் | 0 0 3·04 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்தாடும் ஒழுங்கை; கிழக்கு-சோனகத்தெரு பிரிவிலிருந்து போகும் ரோட்டு; தெற்கு-232,666 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-232,667 ம் உ. ப. ல் காணும் காணி.

II.—மன்னார் பட்டண அளவை.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 46B | வெளிநிலம் | 0 0 0·10 |

எல்லைகளாவன: வடக்கு-பிறக்றர் ஏ. எல். சவுந்திரநாயகம் உரித்தாடும் வீடும் வளவும்; கிழக்கும், தெற்கும்-முடி விலைக்குவாங்கிய தபால்கந்தோரும் வளவும்; மேற்கு-சீமாம்பிள்ளையுடைய மனைவியார் உரித்தாடும் ஓடுபோட்ட வீடும் தற்போது பாவிப்புக்காகப் போடப்பட்ட குடிசையும் வளவும்.

III.—மன்னார்பட்டண அளவை.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 24 | பகிரங்க கந்தோர் கிளாக்குமார் இருக்கும் வீடுகளும் வளவும் | 0 1 19·71 |

எல்லைகளாவன: வடக்கு-109,142, 232,666 ம் உ. ப. ல் காணும் காணித்துண்டுகள்; கிழக்கு-232,666 ம் உ. ப. ல் காணும் காணித்துண்டு; தெற்கு-முடி உரித்தாடும் முத்த வெளிநிலம் (ரோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்); மேற்கு-முடி உரித்தாடும் குறுக்கு ரோட்டுக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்.

*இங்கிலீசின் மூன்றாம் பாகம் 741—742 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[மன்னார் வி. உ. 1—1918.]

[அறிவித்தல் இல. 6,838, அனுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக் குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (மே) வைகாசிமீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்கொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவறகம்பலாத்த விலாச்சியக் கோறளையைச்சேர்ந்த விலாச்சியத் துலானையில் கெலம்பேவெவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித் துண்டுகள்:—

பிரதமபடம் 737.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | தம்மன்னேகொல்லவல .. | 0 | 1 | 2 |
| 2 | இகலபடகற்றுவ, எக்கிரிவேவலந்த, லபுகாயாய, பன்யாய, பதுகாவேம்புவ, றன்மேலந்த, குடபுலியன்குளமேலந்த, எலபத்தவேம்புவ, கொகொம்பவேம்புவ, அலியாபேகற்றுவ, கொகெகொபேகற்றுவவும் வில்வற்றுவிலந்தவும் .. | 614 | 2 | 8 |
| 3 | தலாவேஓயா (பகுதி) .. .. | 7 | 2 | 18 |
| 4 | அலியாபேஎல .. .. | 0 | 1 | 19 |
| 5 | அலியாபே .. .. | 0 | 3 | 35 |
| 6 | எல .. .. | 0 | 0 | 12 |
| 7 | முதியான்சேறெக்கவல .. | 0 | 1 | 0 |
| 8 | நம்பட்டிகிலியஎல .. .. | 1 | 0 | 38 |
| 9 | எலகாபடகற்றுவ .. .. | 19 | 1 | 31 |
| 10 | கொக்கோபே .. .. | 3 | 0 | 28 |
| 13 | வெவ்கந்தேஅடித்திகா (குளக்கட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 2 | 1 | 39 |
| 14 | கொறுவ்எல .. .. | 0 | 0 | 6 |
| 16 | கெப்பிற்றியாவே, குறுவலிமுகலனவும் மில்லகொல்லேவகெலேயும் .. | 412 | 3 | 35 |
| 17 | எக்கிரிவெவ (குளமும் குளக்கட்டும்) .. | 32 | 0 | 33 |
| 18 | வேகந்தேஅடித்தஅக்கற .. | 0 | 2 | 4 |
| 19 | வெவ்கந்தேஅடித்தகா (குளக்கட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 2 | 3 | 4 |
| 20 | கொறுவ்எல .. .. | 0 | 0 | 3 |
| 21 | மகாபுலியன்குளம (குளமும் குளக்கட்டும்) | 33 | 2 | 38 |
| 22 | எக்கிரிவெலஅடிபாற .. .. | 0 | 1 | 30 |
| 23 | இன்டிபிற்றியேகொற்றுவ, எக்கிரிவெவலந்த, குல்மொற்றிவலயாய, புலியன்குளமலந்த, வன்கொடலந்த, கறிவிலயாயவும் பத்தளயாயவும் .. .. | 238 | 3 | 21 |
| 24 | மில்லகொல்லவஎல .. .. | 1 | 3 | 7 |
| 25 | இன்டிபிற்றியேகற்றுவ .. .. | 2 | 3 | 31 |
| 26 | சூரியதமுனேபாற .. .. | 0 | 1 | 31 |
| 27 | குடமுலியனகுளம (குளமும் குளக்கட்டும்) | 3 | 3 | 12 |
| 28 | வெவ்கந்தேஅடித்திகா (குளக்கட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 0 | 2 | 22 |
| 29 | புளியன்குளமஎல .. .. | 0 | 1 | 35 |
| 30 | கொகோம்பவீம்புவவும் வெலமுகலகற்றுவவும் .. .. | 25 | 2 | 7 |
| 31 | நிக்கவெவஅடிபாறவும் புலியன்குளமபாறவும் .. .. .. | 0 | 1 | 19 |
| 32 | வில்வற்றுவமுகலன .. .. | 10 | 3 | 26 |
| 33 | வில்வற்றுவவல .. .. | 0 | 2 | 12 |
| 34 | பெம்மேவெவலந்தவும் வெலஅத்தறலந்தவும் .. .. .. | 109 | 1 | 28 |
| 36 | எக்கிவேவெவபாற .. .. | 0 | 0 | 6 |
| 37 | வெவ்கந்தேஅடித்திகா (குளக்கட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 1 | 3 | 0 |
| 38 | கெலம்பேவெவ (குளமும் குளக்கட்டும்) .. | 51 | 3 | 34 |
| 39 | மினிபித்தானிய (இடுகாடு) .. | 0 | 2 | 6 |
| 40 | முகலனேவவ .. .. | 0 | 0 | 7 |
| 41 | றர்மலவலமுகலனவும் குடமில்லகொல்லேவமுகலனவும் .. .. | 295 | 1 | 25 |
| 42 | கெலம்பேவெவலந்த, வலகபறணககாயாய | 250 | 2 | 5 |
| 43 | அடிபாற .. .. | 0 | 0 | 19 |
| 44 | கொறுவஎல .. .. | 0 | 0 | 3 |
| 47 | திஸ்பம்ப .. .. | 1 | 1 | 27 |
| 48 | வெவ்கந்தேஅடித்திகா (குளக்கட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 1 | 1 | 15 |
| | | 2,132 | 0 | 21 |

எல்லைகளாவன: வடக்கு-தலாவே ஓயாவின் பகுதி (2 ம் தொப்போ பிரதமபடம்), 7 ம் தொப்போ பிரதமபடம்; கிழக்கு-நம்பட்டிகிலியக் கிராம எல்லை; தெற்கு-துனுபடலெவக் கிராம எல்லை; மேற்கு-7 ம் தொப்போ பிரதமபடம்.

கவனிப்பு.—மேற்குறிக்கப்பட்ட எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் இவ் அறிவித்தலினின்று விலக்கப்பட்டிருக்கின்ற தென்பதையும் அவைகளின் விசாலத் தொகையாகும் 60 ஏக்கர் 3 றூட் 4 பேட்சும் மேற்குறிக்கப்பட்ட 2,132 ஏக்கர் 21 பேட்சுக்குள் அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

பிரதமபடம் 737.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| A 11 | புளியன்குளமஅக்கற (233,529 ம் உ. ப.ல் காணும் காணியும் பிறவும்) .. | 26 | 3 | 19 |
| A 12 | ஷை .. .. | 0 | 0 | 19 |
| 15 | எக்கிரிவெவபுறானவெல .. | 12 | 2 | 15 |
| B 35 | கெலம்பேவெவபுறானவெல .. | 17 | 0 | 9 |
| B 45 | கன்கொட .. .. | 1 | 3 | 25 |
| B 46 | கொற்றுவெல .. .. | 2 | 0 | 37 |
| | | 60 | 3 | 4 |

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 743 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அநுராசபுரம் வி. உ. 10—1918.]

---

[அறிவித்தல் இல. 6,839, அநுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுககுண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1918 ம் ௵ (மே) வைகாசிமீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம் 1899 ம் 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்த விலாச்சிய கோறளையைச்சேர்ந்த அந்தரவெவதுலானையில் அந்தரவெவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 1 ஏக்கர் 1 றூட் 1 பேட்சு விசாலமுடையதும், 663 ம் பிரதமபடத்தில் 13 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமா[illegible]ய

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 744 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

மாய் கோமடியகலேலந்து (ரோட்டுக்கு சேமிக்கப்பட்ட நிலம்) என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட கொமாடிய கலலந்த, 149,079 ம் உ. ப. ல் காணும் காணி), பாழ்நில கட்டளைச் சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்ககப்பட்ட அக்கர இடம, 135,587 ம் உ. ப. ல் காணும் காணி; கிழக்கு-பாழ்நில கட்டளைச் சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்ககப்பட்ட கொமாடியகலலந்த; தெற்கு-அநுராசபுரத்திலிருந்து புத்தளத்துக்கு போகும் பெரியரோட்டு, 135,527 ம் உ. ப. ல் காணும் காணி, அநுராசபுரத்திலிருந்து புத்தளத்துக்கு போகும் பெரிய ரோட்டு, 241,158 உ. ப. ல் காணும் காணி; மேற்கு-பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட கொமாடியகல லந்த.

[அநுராசபுரம் வி. உ. 11—1918.]

---

[அறிவித்தல் இல. 6,840, அநுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஆடு (மே) வைகாசிமீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டஙகளின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷஉத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்த விலாச்சிய கோறளையைச்சேர்ந்த அந்தரவெவதுலாணையில் சிங்காரகம என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே, 2 ஏக்கர் விசாலமுடையதும் 664 ம் பிரதமபடத்தில் 1A ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் வெலகாவலந்த என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-றெலபனுவ கிராம எல்லை; கிழக்கு-றெலபனுவ கிராம எல்லை, முடிக்குரிய வெலகாவலந்த; தெற்கு-கிராமத்தாருக்குரிய உடமலுவேகும்புற; மேற்கு-முடிக்குரிய வெலகாவலந்த. *இங்கிலீசின் மூன்றும் பாகம் 745 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அநுராசபுரம் வி. உ. 12—1918.]

---

[அறிவித்தல் இல. 6,841, புத்தளம்.]

1897 ம், 1899 ம், 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச்சொல்லப்படுங் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுகிறவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஆடு (மே) வைகாசிமீ 3 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே, புத்தளம் கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்டகாணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலககச் சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்தகாணி முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவைற்,
உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் புத்தளம் டிஸ்திறிக் கல்பிட்டி பகுதி அக்கரைப்பற்று வடக்கு ஓடக்கரை என்னுங் கிராமத்திலிருக்கும் இத்தோடணைத்திருக்கும் அச்சரத்தில்* கண்ட காணித்துண்டுகள் :—

| காணித்துண்டு. | | காணியின் பெயர். பி. பிளான் நிம்பர் 4,548. ஓடக்கரை. | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 2 | .. | அர்க்கோடைக்காணி (சவக்காலைக்காக விடப்பட்ட வளி) .. .. | 0 1 15 |
| 3 | .. | ஷை (சவக்காலை நிலம்) .. .. .. | 0 1 19 |
| 5 | .. | சவக்காலை என்ற அர்கோணக காணி (சவக்காலைக்காக விடப்பட்ட வளி) .. | 0 2 0 |
| | | | 1 0 34 |

எல்லைகள்: வடக்கு-டயிட்டல் பிளான் நிம்பர் 324,254 இல் காட்டிய காணி; கிழக்கு-முடிக்குரியதாய் உரித்துப்பேசும் தடையன்வெளியும், டயிற்றல் பிளான் நிம்பர் 324,254 இல் கண்ட காணியும்; தெற்கு-டயிட்டல் பிளான் நிம்பர் 324,254 இல் கண்ட காணி; மேற்கு-டயிற்றல் பிளான் நிம்பர் 84,883 இல் கண்ட காணி.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 745 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 6,842, புத்தளம்.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஆடு (மே) வைகாசிமீ 3 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே புத்தளம் கச்சேரியில் உப அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணி அல்லது காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச்சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணியை அல்லது காணிகளை உப அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாதாகிய குறித்த காணி முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவைற்,
உப அரசாட்சி ஏசன்று, புத்தள சிலாப டிஸ்திறிக்கு.

சொல்லப்பட்ட காணியின் விவரம்.

இத்தோடு அணைத்திருக்கிற பிளானில்* விபரித்திருக்கிற வடமேல் மாகாணத்தில், தெமலகாத்பத்தைச்சேர்ந்த ரூஜவன்னிப்பத்திலிருக்கும் உப்புகுளகிருமத்திலுள்ள காணிகளின் விபரமாவது :—

பிளான் நொம்பர் 3.978.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 612 | உப்புகுளம்கெலே .. | .. 20 3 14 | 618 | உப்புகுளம்கெலே .. | .. 2 1 7 |
| 613 | ஷை .. | .. 5 3 16 | 619 | வளி .. | .. 0 1 35 |
| 616 | ஷை .. | .. 28 0 18 | | | |
| 617 | புப்புகுளச்சேனே .. | .. 6 1 5 | | | 63 3 15 |

இதற்கு எல்லைகளாவது: வடக்கு-உப்பு ஆறு; கிழக்கு-முடிக்குரிய உப்புகுளமூக்குளானெயும் உப்புகுள குளமும்; தெற்கும் மேற்கும்-முடிக்குரிய உப்புகுளமூக்குளானெ.

21 ஏக்கர் 1 றூட் 14 பேட்சும் 2 ஏக்கா 1 றூட் 18 பேட்சும் விசாலங்கொண்ட உப்புக்குள வயலென்றழைக்கப்படும் 614,615 ம் நிம்பரைக்கொண்ட இவ்விரு காணிகளையும் இந்த அறிவித்தலில் விலக்கப்பட்டிருக்குது. மேலும் அவ்விரு காணிகளின் மொத்த விசாலமான 23 ஏக்கர் 2 றூட் 32 பேர்ச்சையும் மேலே காட்டப்பட்ட 63 ஏக்கர் 3 றூட் 15 பேர்ச்சில் [illegible]சர்க்கப்படவில்லை. *இங்கிலீசின் மூன்றும் பாகம் 746 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.